சென்னை, ராஜா அண்ணாமலைபுரம், அண்ணா பல்கலைக்கழக முன்னாள் மாணவர் மன்ற வளாகத்தில் நடைபெற்ற உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றத்தின் மணி விழாவில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், உயர் கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன் ஆகியோர் கலந்து கொண்டு உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றத்தின் ஆய்விதழை வெளியிட்டார்கள். இந்நிகழ்ச்சியில் அண்ணா பல்கலைக்கழக முன்னாள் மாணவர் மன்றத்தின் நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றத்தின் ஆய்விதழ் வெளியீடு!

குரங்கம்மை தொற்றுக்கான சிறப்பு வார்டுகள் தயாராக உள்ளது!

ராஜா அண்ணாமலைபுரத்தில் அமைச்சர் மா.சுப்பிரமணியன் பேட்டி!

சென்னை, நவ.3- மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் மற்றும் உயர்கல்வித் துறை அமைச்சர் கோ. வி.செழியன் ஆகியோர் நேற்று (02.11.2024) சென்னை, ராஜா அண்ணாமலைபுரம், அண்ணா பல்கலைக்கழக முன்னாள் மாணவர் மன்ற வளாகத்தில் நடைபெற்ற உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றத்தின் மணி விழாவில் ஆய்விதழை வெளியிட்டு விழா பேருரையாற்றினார். பின்னர் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

உலக தமிழ் ஆராய்ச்சி மன்றத்தின் மணி விழா!

உலக தமிழ் ஆராய்ச்சி மன்றத்தின் மணி விழா இன்று மிகச்சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகிறது. பிற்பகல் இரண்டு அமர்வுகள் கொண்ட நிகழ்ச்சிகள் நடைபெறவிருக்கிறது. இலக்கியம் தொடர்பாக நடைபெறவிருக்கும் அமர்வில் 4 அறிஞர் பெருமக்களும் அதன் பிறகு தொல்லியல் என்னும் தலைப்பில் நடைபெறவிருக்கின்ற அமர்வில் 4 அறிஞர்களும் கலந்து கொள்ள உள்ளனர்.

இந்த அமைப்பை பொறுத்தவரை கடந்த 60 ஆண்டுகளில் 11 மாநாடுகளை நடத்தி மிகச்சிறப்பான வகையில் தமிழ் ஆராய்ச்சிகள் குறித்து, தமிழ் வளர்ச்சி குறித்து, தமிழ் எழுச்சி குறித்து மாநாடுகளை நடத்தி வருகிறார். சற்றேரக்குரிய 150 அறிஞர் பெருமக்கள் உலகின் பல் வேறு நாடுகளிலிருந்து வருகை தந்து இந்த நிகழ்ச்சியை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். இதில் 1968-ஆம் ஆண்டு நடைபெற்ற மாநாட்டில் பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள் கலந்து கொண்டார். 20ஆம் ஆண்டில் நடைபெற்ற மாநாட்டில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

இத்தகைய சிறப்புக்குரிய அமைப்பு மணிவிழா கொண்டாடப்பட்டு வருகிறது. இந்த மணிவிழா கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக பல்வேறு வகைகளில் தமிழின் வளர்ச்சி, தமிழ் இலக்கியங்களின் தொன்மை, தமிழ் மொழியின் தொன்மை, அதே போல் தொல்லியல் இதில் தமிழர் வரலாறு பழந்தமிழர் வரலாறு போன்ற பல் வேறு விஷயங்கள் குறித்து இங்கே பல்வேறு அறிஞர் பெருமக்கள் உரை நிகழ்த்திக் கொண்டிருக்கிறார்கள்.

குரங்கம்மை நோய் தொடர்பான கேள்விக்கு

கடந்த இரண்டு நாட்களுக்கு முன்னாள் ஷார்ஜா என்னும் ஊரிலிருந்து ஒரு 27 வயது இளைஞர் வந்தார். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டு தலோடு, தமிழ்நாட்டில் இருக்கின்ற அனைத்து பன்னாட்டு விமான நிலையங்களிலும் குறிப்பாக சென்னை, மதுரை, கோவை, திருச்சி போன்ற பன்னாட்டு விமான நிலையங்களில். வெளிநாடுகளில் இருந்து யார் வந்தாலும் அவர்களை Screening செய்கிற பணி என்பது தொடர்ச்சியாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. நானே அனைத்து பன்னாட்டு விமானநிலையங்களிலும் நேரிடையாக சென்று Fever Screening System பொறுத்தப்பட்டு வெளிநாடுகளில் இருந்து வருபவர்கள் காய்ச்சல் பாதிப்புகளோடு இருந்தால் அவர்களை கண்டறிந்து அவர்களுக்கு குரங்கம்மை பாதிப்பு இருக்கிறதா என்று பரிசோதனை செய்தும், அவர்கள் மீது ஏதாவது கொப்புளங்கள் இருக்கிறதா என்று ஆராய்ச்சி செய்யும் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

அனைத்து விமான நிலையங்களிலும் isolated Ward என்கின்ற வகையில் ஒரு அறை ஏற்படுத்தப்பட்டு இருக்கிறது. பன்னாட்டு விமான நிலையங்கள் இருக்கும் நகரங்களான குறிப்பாக சென்னையைப் பொறுத்தவரை ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனையில் குரங்கம்மைக்கான பிரத்யேகமான 10 படுக்கைகளுடன் கூடிய வார்டுகள் திறந்து வைக்கப்பட்டிருக்கிறது.

திருச்சியைப் பொறுத்தவரை கி.ஆ.பெ விஸ்வநாதன் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் 10 படுக்கைகளுடன் கூடிய சிறப்பு வார்டு திறந்து வைக்கப்பட்டுள்ளது. இதே போல் கோவை, மதுரை போன்ற இடங்களிலும் குரங்கம்மை தொற்றுக்கான சிறப்பு வார்டுகள் திறந்து தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது. 27 வயது கொண்ட ஒருவர் நேற்று முன்தினம் பகல் 12 மணிக்கு ஷார்ஜாவிலிருந்து வந்தவர். அவருக்கு Screening System பரிசோதனையில் அவருக்கு காய்ச்சல் பாதிப்பு இருப்பது கண்டறியப்பட்டிருக்கிறது. அவரை isolated அறையில் அவருடைய ஆடைகளை கலைந்து பார்த்த போது ஒரு சிறிய அளவிலான கொப்பளங்களும் இருந்துள்ளன, அவரை திருச்சி கி.ஆ.பெ மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு கொண்டு சென்றிருக்கிறார்கள், அவர் சிகிச்சைக்கு பயந்து மருத்துவமனையிலிருந்து தப்பி விட்டார், அவருடைய சொந்த ஊர் திருவாரூர் மாவட்டம், வலங்கைமான் ஆகும். இந்த சிகிச்சை அவருடைய நல்லதுக்கு தான், இந்த குரங்கம்மை காய்ச்சல் யாருக்கும் பரவாமல் தடுப்பதற்காக தான் சிகிச்சை மேற்கொள்வோம். எனவே காவல்துறையினரின் உதவியோடு வலங்கைமான் பகுதியிலிருந்து திருச்சி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு இருக்கிறார். திருச்சி மருத்துவமனையில் இருந்து அவருக்கு பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

சென்னையில் குரங்கம்மை காய்ச்சல் பரிசோதனைக்கு 25 இடங்கள் அனுமதிக்கப்பட்டு நடத்தப்பட்டு வருகிறது. அதில் ஒன்று சென்னை கிண்டி கிங் நோய்த்தடுப்பு மருந்து நிலையம், அவருக்கு நேற்று மதியம் பரிசோதனை முடிவு வந்துள்ளது. நெகடிவ் என்று, அவருக்கு குரங்கம்பை பாதிப்பு இல்லை. சிக்கன் பாக்ஸ் என்னும் வகையில் முடிவு வந்துள்ளது. மேலும் பரிசோதனை மீண்டும் மறு ஆய்வுக்காக புனேவில் உள்ள National Institute of virology என்கின்ற ஒரு அமைப்பு உள்ளது. அந்த அமைப்பிற்கு இந்த மாதிரியை அனுப்பியிருக்கிறோம். இன்றோ அல்லது நாளையோ அதற்கான முடிவுகள் தெரிய வரும். முடிவுகள் வந்தவுடன் பத்திரிக்கையாளர்களுக்கு இதுகுறித்து தெரியப்படுத்தப்படும். அந்த நபர் திருச்சி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு நன்றாக சிகிச்சை வழங்கப்பட்டு வருகிறது.

தீபாவளி தீக்காயங்கள் தொடர்பான கேள்விக்கு

தீபாவளி தினத்தன்று ஒரு மணி நேரம் சென்னை கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் தீக்காய சிறப்பு பிரிவில் பணியாற்றிய 120 மருத்துவர்கள் மற்றும் மருத்துவம் சார்ந்த பணியாளர்களுடன் தேநீர் அருந்தி கலந்துரையாடி பாராட்டினோம். தமிழ்நாடு முழுவதும் சின்ன சின்ன விபத்துகள், குறிப்பாக 20% கீழான விபத்துகள் தான், எல்லாருமே நன்றாக இருக்கிறார்கள், உயிரிழப்புகள் இல்லாத தீபாவளி என்பது மகிழ்ச்சிக்குரிய ஒன்று. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தொடர்ந்து இந்த துறையை கண்காணித்துக் கொண்டிருந்த காரணத்தினால், எல்லா துறைகளும் குறிப்பாக தீயணைப்புத் துறை மிக கவனமாக செயல்பட்டனர். அதேபோல் மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் அவர்களது கடமையை மிகச் சிறப்பாக செய்தார்கள், அனைத்து சேவை துறைகளும் மிகச்சிறப்பாக பணியாற்றி கடந்த 3 ஆண்டுகளாக இறப்பு இல்லா நிலை தொடர்ந்து வருகிறது.

வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கை

வடகிழக்கு பருவமழை தொடங்கியதே ஒரு அதிவேகத்தில், ஒரு வடத்திற்கு பெய்ய வேண்டிய வடகிழக்கு பருவமழை அளவு 44 செ.மீ, ஆனால் இந்த ஆண்டு வடகிழக்கு பருவமழை ஒரே நாளில் சோழவரம் பகுதியில் 30 செ.மீ அளவில் பெய்துள்ளது. செங்குன்றம் பகுதியில் 28 செ.மீ, ஆவடி 25 செ.மீ, சென்னை முழுவதும் 20 செ.மீ மேலாக பரவலாக மழை பெய்திருக்கிறது. இவ்வளவு மழை பெய்த பிறகு, முதலமைச்சர் அவர்கள் எடுத்த முன்னெச்சரிக்கை நடவடிக்கை காரணமாக மழையினால் பாதிப்புகள் ஏற்படாத வகையில் அமைந்துள்ளது. இருப்பினும் மழை தொடர்ச்சியாக பெய்துக் கொண்டு தான் வருகிறது. நேற்று முன்தினம் அண்ணா நகரில் ஒரு மணிநேரம் அதிகமாக மழை பெய்தது, மழைநீர் உடனடியாக வடிந்து விடுகிறது. சென்னை மாநகராட்சி சார்பில் 1000த்திற்கும் மேற்பட்ட மோட்டார்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டிருக்கிறது.

வடகிழக்கு பருவமழை தொடங்கியதும் தமிழ்நாடு முழுவதும் ஒரே நேரத்தில் 1000 மழைக்கால சிறப்பு முகாம்கள் அறிவிக்கப்பட்டு நடத்தப்பட்டுள்ளது, மொத்தமாக 1296 முகாம்கள் நடத்தியிருக்கிறோம். மதுரை மாவட்டத்தில் கடந்த 2 நாட்களில் 700க்கும் மேற்பட்ட மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டுள்ளது. தொடர்ச்சியாக மழைக்கால மருத்துவ முகாம்கள் அனைத்து இடங்களிலும் நடத்தப்பட்டு வருகிறது. குறிப்பாக ஏதாவது நகரமோ அல்லது கிராமமோ ஒன்றுக்கும் மேற்பட்ட காய்ச்சல் பாதிப்புகள் இருந்தால் உடனடியாக மருத்துவ சிறப்பு முகாம்கள் நடத்தப்படும் என்று மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் அண்ணா பல்கலைக்கழக முன்னாள் மாணவர் மன்றத்தின் நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு, திருச்சிராப்பள்ளி மாவட்டம், மண்ணச்சநல்லூர் வட்டம், முக்கொம்பு மேலணை காவிரி ஆற்றில் மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறையின் சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில் ரூபாய் 4.50 இலட்சம் மதிப்பீட்டில் நன்னீர் மீன்குஞ்சு பெருவிரலிகள் ஆறுகளில் இருப்பு செய்தல் திட்டத்தினை தொடங்கி வைத்தார். இந்நிகழ்வில் மாவட்ட ஆட்சித்தலைவர் மா.பிரதீப் குமார், ஸ்ரீரங்கம் சட்டமன்ற உறுப்பினர் எம்.பழனியாண்டி , மண்ணச்சநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் சீ.கதிரவன், ஒன்றியக் குழுத் தலைவர் துரைராஜ், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை துணை இயக்குநர் (திருச்சி மண்டலம்) இரா.ரவிச்சந்திரன், உதவி இயக்குநர், மு.குமரேசன், ஆய்வளர்கள் சி.பாஸ்கர், ரா.கௌதம், கன.வீரமணிமாருதி மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசுத்துறை அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

கந்தசஷ்டி பெருவிழாவை முன்னிட்டு - திருவான்மியூர்

பாம்பன் குமரகுருதாச சுவாமி திருக்கோயிலில் மாணவ, மாணவியரின் கந்தசஷ்டி பாராயணம்!

இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தொடங்கி வைத்தார்!

சென்னை, நவ.3- இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு நேற்று (02.11.2024) திருவான்மியூர், பாம்பன் குமரகுருதாச சுவாமி திருக்கோயிலில் கந்தசஷ்டி பெருவிழாவை முன்னிட்டு சென்னை, கீழ்ப்பாக்கம், அருள்மிகு ஏகாம்பரநாதர் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி மற்றும் கொளத்தூர் கபாலீசுவரர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி மாணவியரின் கந்த சஷ்டி பாராயணம் நிகழ்ச்சியினை தொடங்கி வைத்தார்.

பின்னர், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான திராவிட மாடல் ஆட்சி ஏற்பட்ட பிறகு, இந்து சமய அறநிலையத்துறையில் மறுமலர்ச்சி ஏற்பட்டு துறையின் பொற்காலமாக திகழ்கிறது என்றால் அது மிகையாகாது. அதற்கு திருவான்மியூர் பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகள் திருக்கோயிலே ஒரு சாட்சியாகும்.

இந்த திருக்கோயிலுக்கு குடமுழுக்கு நடத்திட 1988-ஆம் ஆண்டு பாலாலயம் செய்யப்பட்டு சுமார் 36 ஆண்டுகளுக்குப் பிறகு நீதிமன்றத்தின் மூலம் சட்டப்படியான நடவடிக்கை மேற்கொண்டு இந்த ஆண்டு குடமுழுக்கு நடத்தப்பட்டது.

அதேபோல இத்திருக் கோயிலில் மயூர வாகன சேவனத்தின் 100-ஆம் ஆண்டு விழா கொண்டாடப்பட்டு, பாம்பன் சுவாமிகளின் சரித்திரம் எனும் நூல் புதுப்பிக்கப்பட்டு வெளியிடப்பட்டது. அதேபோல 1988-ஆம் ஆண்டிற்கு பிறகு அதாவது 36 ஆண்டுகளுக்குப் பிறகு இத்திருக்கோயிலில் இலட்சார்ச்சனை தொடங்கப்பட்டுள்ளது.

மாணவ-மாணவியருக்கு பயிற்சி!

முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதல்படி, பழனியில் நடைபெற்ற அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களில் ஒன்றான கந்த சஷ்டி பெருவிழாவின் போது திருக்கோயில் சார்பில் நடத்தப்படுகின்ற பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவியர் மற்றும் இசைக் கல்லூரி மாணவ, மாணவிகள் மூலம் கந்த சஷ்டி பாராயணம் செய்யப்படும் என்று தீர்மானம் நிறைவேற்றி இருந்தோம்.

அந்த வகையில் இந்த ஆண்டு 738 பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவியருக்கு பயிற்சி அளித்து 12 முருகன் திருக்கோயில்களில் கந்த சஷ்டி பாராணயம் செய்கின்றனர். அதன் முதல் நிகழ்ச்சியாக திருவான்மியூர் பாம்பன் சுவாமி திருகோயிலில் 120 பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவியரின் பாராணயம் சிறப்போடு நடைபெற்றிருக்கிறது.

இதன் தொடர்ச்சியாக வருகின்ற 4-ஆம் தேதி கந்த கோட்டத்திலும், 6-ஆம் தேதி வடபழனியிலும் கந்த சஷ்டி பாராயணம் நடைபெற உள்ளது. இந்த கந்த சஷ்டி பாராயணத்தில் இந்து சமய அறநிலையத் துறை திருக்கோயில்கள் சார்பில் நடத்தப்படுகின்ற பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் பயிலும் விருப்பமுள்ள மாணவ, மாணவியர் மற்றும் இசைக் கல்லூரி மாணவியர் பங்கேற்கின்றனர்.

ரூ. 13 லட்சத்தில் புதிதாக தேர்!

இந்த பகுதியிலேயே வசிக்கின்ற பாம்பன் ஸ்ரீமத் சுவாமிகளின் பக்தர்கள் இந்த ஆட்சியில் இந்த திருக்கோயிலுக்கு செய்து தரப்பட்டுள்ள வசதிகளை கண்டு மிகுந்த மகிழ்ச்சியோடு இந்த ஆட்சியை வாழ்த்தி கொண்டிருக்கிறார்கள். பாம்பன் சுவாமி திருக்கோயிலுக்கு ரூ.13 லட்சம் செலவில் புதிதாக திருத்தேர் செய்து தரப்பட்டு பவனி வந்து கொண்டிருக்கின்றது. அதற்கு பாதுகாப்பு கொட்டகையையும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. திராவிட மாடல் ஆட்சி ஏற்பட்ட பிறகுதான் உபயதாரர்கள் தருகின்ற நிதி முழுமையாக அவர்கள் எந்த நோக்கத்திற்காக திருக்கோயிலுக்கு தருகிறார்களோ அவை முழுமையாக பயன்படுத்தப்பட்டு அவர்களின் நோக்கம் உறுதியாக நிறைவேறுகிறது என்பதை நம்பி இதுவரை ரூ.960 கோடியை திருப்பணிகளுக்கு மூன்றை ஆண்டுகளில் உபயதாரர்கள் வாரி வழங்கி இருக்கின்றார்கள்.

இறையன்பர்கள் வாழ்த்துகின்றனர்!

இப்படி எல்லா வகையிலேயும் இந்து சமய அறநிலையத்துறை புதுப்பொலிவோடும் பக்தர்களுடைய எதிர்பார்ப்புகளை, அடிப்படை தேவைகளை அதாவது, திருத்தேர்களை புனரமைத்தல், திருக்குளங்களை செப்பனிடுதல், பக்தர்கள் தங்கும் விடுதி, முடி காணிக்கை மண்டபம், விருந்து மண்டபம் போன்ற அனைத்து வசதிகளையும் நிறைவேற்றி வருகிறது, அதனால்தான் இந்த ஆட்சியை, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை இறையன்பர்கள் வாழ்த்துகின்றனர். இதன் மூலம் இறைப் பணிகளுக்கு முழுமையாக அர்ப்பணித்து செயல்படுவதில் எங்களுக்கு புதிய உத்வேகம் எழுகிறது.

பக்தர்கள் தங்கும் விடுதி!

திருச்செந்தூரில் கந்த சஷ்டி பெருவிழாவிற்கான ஏற்பாடு சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அங்கு இறையன்பர்கள் விரதம் மேற்கொள்ள தற்காலிக நிழல் கொட்டகைகள் அமைக்கப்பட்டுள்ளதோடு, கந்த சஷ்டி விழாவின் போது ஒவ்வொரு நாளும் சுமார் ஒரு லட்சம் பக்தர்களும், சூரசம்ஹாரம் நடைபெறுகின்ற நாளன்று சுமார் 6 லட்சம் பக்தர்களும், திருக்கல்யாண நாளன்று சுமார் 2 லட்சம் பக்தர்களும் ஒட்டுமொத்தமாக சுமார் 14 லட்சம் பக்தர்கள் வருகை தருவார்கள் என்று கணக்கிடப்பட்டு அதற்கு தகுந்தாற்போல் கழிப்பிட வசதி, சுகாதார வசதி, மருத்துவ வசதி. போக்குவரத்து வசதி போன்ற அனைத்து வசதிகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. பாதுகாப்பு பணியில் 2,000க்கும் மேற்பட்ட காவல்துறை யினர் ஈடுபடுத்தப்பட உள்ளனர்.

இந்த விழாவினை அனைத்து துறையினரும் ஒருங்கிணைந்து மேற்கொண்டு வருகிறார்கள். இறையன்பர்கள் தங்குவதற்கு ஏதுவாக திருச்செந்தூரில் புதிய பக்தர்கள் தங்கும் விடுதி திறக்கப்பட்டுள்ளது. நாங்கள் முழுமையாக பக்தர்களின் தேவைகளை அறிந்து அதனை செய்து கொண்டிருக்கின்றோம். அந்த வகையில் பக்தர்களுடைய தேவைகளை நிறைவேற்றுகின்ற எங்களுடைய இந்த பயணம் தொடரும்.

இந்நிகழ்ச்சியில் இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி.என்.ஸ்ரீதர், கூடுதல் ஆணையர்கள் டாக்டர் இரா. சுகுமார், திருமதி சி.ஹரிப்ரியா, இணை ஆணையர் திருமதி கி.ரேணுகாதேவி, துணை ஆணையர் இரா.ஹரிஹரன், உதவி ஆணை யர்கள் கி.பாரதிராஜா, கே.சிவகுமார், மாநகராட்சி மன்ற உறுப்பினர் திருமதி கயல்விழி மற்றும் செயல் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

அமைச்சர் பி.கே. சேகர்பாபு தலைமை!

எழும்பூர் சட்டமன்றத் தொகுதி கலந்தாலோசனைக் கூட்டம்!

தொகுதி பொறுப்பாளர் பி.எம்.யாழினி சிறப்புரை! சொ.வேலு, வி.சுதாகர் அறிவிப்பு!

சென்னை நவ.3- சென்னை கிழக்கு மாவட்டம், எழும்பூர் வடக்கு,தெற்கு பகுதி கழக செயலாளர்கள் சொ.வேலு, வி.சுதாகர் ஆகியோர் விடுத்துள்ள அறிவிப்பு வருமாறு;

சென்னை கிழக்கு மாவட்டம்,எழும்பூர் சட்டமன்ற தொகுதி கலந்தாலோசனைக் கூட்டம்

சென்னை கிழக்கு மாவட்ட கழக செயலாளர்,இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தலைமையில் இன்று (3.11.2024 ஞாயிற்றுக்கிழமை) சச்சிதானந்தம் தெரு, சமூக நலக் கூடத்தில் நடைபெறுகிறது.

கூட்டத்திற்கு தயாநிதி மாறன் எம்.பி, மேயர் பிரியாராஜன், இ.பரந்தாமன் எம்.எல்.ஏ, மாவட்ட அவைத்தலைவர் கோ. ஏகப்பன்,மாவட்ட துணை செயலாளர் புனிதவதி எத்திராசன் சட்டத்துறை இணைச் செயலாளர் கே.எஸ்.ரவிச்சந்திரன்,தமிழன் பிரசன்னா (கழக செய்தி தொடர்பு இணை செயலாளர்) பரிதி இளம் சுருதி, (மாநில துணை செயலாளர் அயலக அணி) ராஜேஸ்வரி ஸ்ரீதர் (மாவட்ட அமைப்பாளர்) தாமோதரன் (மாவட்ட அமைப்பாளர்), சுந்தர் ராஜன் (மாமன்ற உறுப்பினர்) முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.மணிமுடி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் கே. எஸ்.எம். நாதன், பொதுக்குழு உறுப்பினர்கள் கோ.மணி, அ.நிர்மலா தேவி ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

கூட்டத்தில் தொகுதி பொறுப்பாளர் பி.எம். யாழினி ஆலோசனை வழங்கி சிறப்புரையாற்று கிறார்.

எனவே சென்னை கிழக்கு மாவட்டம் எழும்பூர் வடக்கு,தெற்கு பகுதிக் குட்பட்ட மாநில, மாவட்ட, பகுதி, வட்ட கழக நிர்வாகிகள் மற்றும் அணிகளின் நிர்வாகிகள், செயற்குழு உறுப்பினர்கள், பகமுகவர்கள்,BLC உறுப்பினர்கள் மற்றும் கழக மூத்த முன்னோடிகள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு கேட்டு கொள்கிறோம்.

இவ்வாறு பகுதிச் செயலாளர்கள் சொ. வேலு,வி. சுதாகர் அறிவிப்பில் தெரிவித்துள்ளனர்.

மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. தலைமை! டாக்டர் ஜெ.அருண் முன்னிலை!

மாதவரம் வடக்குப் பகுதி பாக முகவர்கள் ஆலோசனைக் கூட்டம்!

பகுதிக் கழகச் செயலாளர் புழல் எம்.நாராயணன் அறிக்கை!

சென்னை, நவ.3- தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் ஆணைப்படி, தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, சென்னை வடகிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. தலைமையில், மாதவரம் வடக்குப் பகுதி, 15, 16, 17, 19, 23, 23 (அ) ஆகிய வட்டங்களுக்கு உட்பட்ட பாக முகவர்கள் ஆலோசனைக் கூட்டங்கள் இன்று (3.11.2024 ஞாயிற்றுக்கிழமை) காலை 9 மணி முதல் பின்வரும் இடங்களில், குறிப்பிட்ட நேரங்களில் நடைபெற நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் மாதவரம் தொகுதி பார்வையாளர் மருத்துவர் ஜெ.அருண் கலந்து கொண்டு ஆலோசனைகளை வழங்குகிறார்.

அது சமயம் மாதவரம் வடக்கு பகுதிக்கு உட்பட்ட மாவட்ட, பகுதி, வட்ட கழக நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், பாக முகவர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் அனைவரும் தவறாது கலந்து கொண்டு கூட்டத்தை சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

1) 15 வது வட்டம், காலை 9 மணிக்கு, மணலி புதுநகர் கழக அலுவலகம்.

2) 16 வது வட்டம், காலை 9.30 மணிக்கு, வட்டச் செயலாளர் இ.கண்ணப்பன் இல்லம், ஆண்டார் குப்பம்.

3) 19 வது வட்டம், காலை 10 மணிக்கு, ராகவேந்திரா திருமண மண்டபம், மாத்தூர், எம்.எம்.டி.ஏ, 2 வது பிரதான சாலை.

4) 17 வது வட்டம், காலை 10.30 மணிக்கு, சென்னை மாநகராட்சி சமுதாயக் கூடம், வடபெரும்பாக்கம், சின்ன தோப்பு.

5) 23 வது வட்டம், பகல் 11 மணிக்கு, வட்டச் செயலாளர் பி.எஸ்.சந்துரு, அலுவலகம் பாரதியார் தெரு, காவாங்கரை.

6) 23 (அ) வட்டம், பகல் 11.30 மணி, கலைஞர் நற்பணி மன்றம், கே.எஸ்.நகர், காவாங்கரை.

இக்கூட்டங்களை வட்டச் செயலாளர்கள் கே.அங்குசாமி, இ.கண்ணப்பன், கே.கருணாகரன், மாத்தூர் கா.தாமரைச்செல்வன், பி.எஸ்.சந்துரு, வி.ஆர்.குப்பன் ஆகியோர் சம்பந்தப்பட்ட வட்டங்களில் அனைவருக்கும் தகவல் கொடுத்து கூட்டங்களை சிறப்பாக ஏற்பாடு செய்து நடத்துமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு மாதவரம் வடக்கு பகுதிச் செயலாளர் புழல் எம்.நாராயணன் கூறியுள்ளார்.